**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 143/2024**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்னலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சீனிச்சிதம்பரம் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | வீரசிகாமணி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 20th, 2026.

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 14.02.2023 அன்று இரசாயன பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய வட்டார தடய அறிவியல் அலுவலர் வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொண்டேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.

பின்னர் 28.08.2023ம் தேதி, 17.00 மணிக்கு பொட்டல்புதூர் – பாப்பாங்குளம் செல்லும் ரோட்டில் நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் 2வது எதிரி கிருஷ்ணசாமி என்ற கிட்டுவை கைது செய்து அங்கிருந்த ஆஜர் சாட்சிகளான முத்துக்குமார், பட்டு ஆகியோர் முன்னிலையில் 17.15 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.45 மணிக்கு நிலையம்

கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். முத்துக்குமார், பட்டு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து வழக்கு கோப்பை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். பின்னர் இந்த வழக்கை ஆய்வாளர் கௌதமன் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

ஒப்புதல் வாக்குமூலம் நான் கைப்பட எழுதவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் மற்றும் எதிரியின் கையெழுத்து சம்பவயிடத்தில் வைத்து பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் சம்பவயிடத்தில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து நான் தட்டச்சு செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்து கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் கேட்ட கேள்வி மற்றும் பதில் பயிற்சி உதவி ஆய்வாளரின் கையெழுத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் 2ம் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், காவல்நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக 1 மற்றும் 2 வது எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.21 15:12:21 +0530